**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.12/2023**
**Prosecution Witness**:9

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ஜீவானந்தம் (PW9 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th **day of March 2026** by V.Nivedha Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் சைபர் கிரைம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.06.2022ம் தேதி நான் கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு வகித்த போது சிவகிரி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் சண்முகம் என்பவர் மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.82/2022 ச/பி.279, 304(A) இதச படியான முதல் தகவல் அறிக்கையை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 29.06.2022ம் தேதி காலை 10.45 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான சந்தைமேடு, நல்லப்பா மாடர் ரைஸ்மில் அருகில் சென்று சாட்சிகள் சக்திவேல் மற்றும் கவிராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **பார்வைமகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கொடுமுடி அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன கிரண் என்பவரின் பிரேதத்தின் மீது பகல் 12.20 மணிமுதல் 16.40 மணிவரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறந்துபோன கிரண் என்பவரின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.24 08:52:32 +0530

காரணம் அறியும்பொருட்டு அவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக கொடுமுடி அரசு மருத்துவமனை அலுவல் மருத்துவருக்கு தலைமை காவலர் 773 பிரகாஷ் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். சாட்சிகள் மருதாசலம், திருப்பதி வெங்கடேஷ், திருப்பதி, சசி என்கிற சக்திவேல், அண்ணாதுரை, சுலோச்சனா, கௌரிசங்கர், அசோக்குமார், சக்திவேல், கவிராஜ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. 01.07.2022ம் தேதி 16.30 மணிக்கு குற்றத்தை ஒப்புக்கொண்டு சிவகிரி காவல்நிலையம் ஆஜரான இவ்வழக்கின் எதிரி வேலுச்சாமி என்பவரை கைது செய்து திரேக பரிசோதனை செய்து உரிய பிணையில் விடுவித்தேன். அன்றைய தினமே எதிரி விபத்தின் போது ஓட்டி வந்த TN 33 AU 7490 லாரியின் உரிமையாளர் ராஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. 05.07.2022ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய எதிரி ஓட்டி வந்த வாகனமான TN 33 AU 7490 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலேண்டு லாரி, விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களான TN 72 T 2118 ஈச்சர் மற்றும் இறந்து போன கிரண் என்பவர் ஓட்டி சென்ற TN 42 F 7627 என்ற எண்ணுள்ள Hero Passion Pro இரு சக்கர வாகனம் ஆகியவற்றை வாகன தணிக்கைக்காக ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பிவைத்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து வழக்கு கோப்பினை தொடர் புலன் விசாரணையின் பொருட்டு கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளர் முருகன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இறந்து போன கிரண் என்பவருக்கு வயது 17, அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். இறந்து போன கிரணின் வண்டி உரிமையாளர் மீதோ, அவருடைய தகப்பனார் மீதோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ ரோடான கிழமேல் ரோட்டில் கிழக்கே இருந்து மேற்கே வாகனம் வரவேண்டும் என்றால் தென்புறம் தான் வரவேண்டும் என்றால் சரிதான். மேற்கே இருந்து கிழக்காக வாகனம் கிழமேல் ரோட்டில் வடபுறம் வரவேண்டும் என்றால் சரிதான். எதிரி

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.24 08:52:41 +0530

ஓட்டிவந்ததாக சொல்லப்படும் வாகனம் கிழக்கே இருந்து மேற்கே வரும்போது தென்புறம் வந்ததாக தான் மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன கிரண் ஓட்டி வந்த வாகனம் மேற்கே இருந்து கிழக்கே ஓட்டி வரும்போது ரோட்டின் வட புறம் வராமல் தென்புறம் வந்து விபத்து ஏற்பட்டதாக சம்பவ இடம் காட்டப்பட்டுள்ளது என்றால் விபத்து நடந்த இடத்தை குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது. எதிரி சரியான பாதையில் தான் வந்தார் என்றும், எதிரியின் அஜாக்கிரதை தான் இந்த விபத்திற்கு காரணம் என்றும் நான் தவறாக புலன் விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.6 சசி என்கிற சக்திவேல் எனது புலன் விசாரணையில் கண்ணுற்ற சாட்சியாக தான் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.6 சசி என்கிற சக்திவேல் கண்ணுற்ற சாட்சி இல்லை என்றும், தவறுதலாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் வழக்கு கோப்பினை மேல் புலன் விசாரணைக்காக கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.24 08:52:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.